அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044- 4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 163 /2016
தேதி. : 28 /10/2016

## பாதுகாப்பான மாசற்ற தீபாவளி நல்வாழ்த்துக்கள்
## ச.ம.க. நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வாழ்த்து.

கடவுள் கிருஷ்ணா அவதாரத்தில் கொடிய அரக்கன் நரகாசுரனை கொன்ற தினத்தினை, நரகாசுரனின் இறுதி ஆசைப்படி கொண்டாடுவது தீபாவளி என்று அறிகிறோம். நன்மை தீமையை வென்றதற்கும், ஒளி இருளை அகற்றியதற்கும், அறிவுடைமை மடமையை வென்றதற்கும் சான்றாக இந்த தீபத்திருநாள் காலங்காலமாக கொண்டாடப்படுகிறது

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் குடும்பத்துடனும் உறவினர் மற்றும் நண்பருடனும் மகிழ்ச்சியாக கொண்டாடும் விழா தீபாவளி. இத்தீபாவளித் திருநாள் மனித உணர்வுகளிடையே வேற்றுமைகளை விரட்டி சமத்துவம் தழைத்தோங்க செய்ய வேண்டும்.

தீபாவளிக்கு முன்பும், தீபாவளியன்றும் பட்டாசுகளால் ஏற்படும் வெடிவிபத்துக்கள் வருடந்தோறும் அதிகரித்து வருகிறது இந்த வருடமும் தீபாவளிக்கு முன்பே வெடி விபத்துக்கள் நடந்திருப்பதை உணர்வீர்கள். இதை கருத்தில் கொண்டு பட்டாசுக்களை வெடிக்கும்போது பாதுகாப்பாகவும், விபத்தில்லாமலும் திருநாளை கொண்டாடவேண்டும்.

மேலும் அரசு அறிவிக்கும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்டிப்பாக மேற்கொள்ளவேண்டும். பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் பட்டாசுகள் வெடிக்கும்போது உடனிருந்து அவர்களை கவனமாக பார்த்துக்கொள்ளவேண்டும். அதோடு மட்டுமல்லாமல் நம் வீட்டில் வளர்க்கும் விலங்குகள் மற்றும் நம்மை சுற்றியுள்ள விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் அவற்றின் பாதுகாப்பையும் மனதில் வேண்டும்.

சீனாவில் தயாரிக்கும் சீனப்பட்டாசுகளை தவிர்த்து, பல்லாயிரக்கணக்கான தமிழர்களை வாழவைக்கும் பட்டாசுக்கு பெயர்போன சிவகாசியில் தயாரிக்கும் பட்டாசுகளை வெடித்து விபத்துக்கள் இல்லாத தீபாவளியாக இந்த தீபாவளி அமைய எச்சரிக்கை உணர்வோடு தீபாவளியை கொண்டாடுவோம். அனைவரது வாழ்விலும் வளம் நிறைந்து வாழ எனது மனமார்ந்த தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்களை என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்